செ.வெ.எண்: 29 நாள்:10.09.2021

நாமக்கல் மாவட்டம்

**12.09.2021 அன்று நடைபெறவுள்ள சிறப்பு தடுப்பூசி முகாமிற்கு கல்லூரி, பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் சுகாதார தூதுவர்களாக பணி மேற்கொள்ள வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப அவர்கள் வேண்டுகோள்.**

-----

கொரோனா நோய்த்தொற்றின் 3-ஆம் அலை பல்வேறு நாடுகள், மாநிலங்களில் பரவி பாதிப்பை ஏற்படுத்தி வருவதை தற்போது பல்வேறு வகையான கொரோனா வைரஸ்கள் கண்டறியப்பட்டு, அவை வீரியமிக்கதாகவும், எளிதில் பரவி மிகுந்த பாதிப்பை உண்டாக்குகின்றன என்பதையும் ஊடகங்கள் வாயிலாக நாம் அறிந்து வருகிறோம். மேலும் அவை வீரியமாக பாதிப்பை உண்டாக்க கூடியவை என்றும் மருத்துவ வல்லுநர்கள் தொடர்ந்து எச்சரிக்கை செய்து வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தீவிர நடவடிக்கைகளின் காரணமாக கொரோனா நோய்த்தொற்று தற்போது கட்டுக்குள் உள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்று அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், உள்ளாட்சி நிர்வாகங்களின் சுகாதார பணியாளர்கள், தன்னார்வாலர்கள் ஆகியோரது அர்பணிப்பு பணிகளால் தற்போது கட்டுப்பாட்டில் உள்ளது.

நாமக்கல் மாவட்டமானது பல்வேறு மாநிலங்களுக்கு கட்டாயம் சென்று வரும் வகையிலான சரக்கு போக்குவரத்து, முட்டை விநியோகம், ஜவுளித்தொழில், லாரி கட்டுமானம் உள்ளிட்ட பல்வேறு தொழில்கள் நடைபெறும் முக்கியமான மாவட்டமாக உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா நோய்த்தொற்றில் இருந்து, பொதுமக்களை பாதுகாத்திடும் விதமாக கொரோனா தடுப்பூசி செலுத்திட 12.09.2021 ஞாயிற்றுகிழமை அன்று “சிறப்பு தடுப்பூசி முகாம்” திட்டத்தை செயல்படுத்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் 12.09.2021 ஞாயிற்றுகிழமை அன்று காலை 7.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், ஊட்டச்சத்து மையங்கள், அங்கன்வாடி மையங்கள், அரசு தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 620 நிலையான குழுக்கள் மற்றும் 80 நடுமாடும் குழுக்கள் மூலம் 700 இடங்களில் "சிறப்பு தடுப்பூசி முகாம்கள்" மூலமாக முதல் தவணை மற்றும் இரண்டாம் தவணை உள்ளிட்ட சுமார் 1,00,000 தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளது.

தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் அனைத்து விதமான வழக்கமான பணிகளையும் எவ்வித தடையுமின்றி மேற்கொள்ளலாம். எந்தவித பத்தியமும் இன்றி எல்லாவகை உணவுகளையும் வழக்கம்போல எடுத்துக்கொள்ளலாம்.

எனவே, வர்த்தகர்கள், தொழில் முனைவோர், பள்ளி, கல்லூரிகளின் ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் தங்களது பெற்றோர் உள்பட 18-வயது நிரம்பிய தங்களது உறவினர்கள், நண்பர்கள் என அனைவரும் இந்த சிறப்பு முகாமில் கலந்து கொண்டு கட்டாயம் தடுப்பூசி செலுத்திக்கொள்ள அறிவுறுத்துவதோடு, அதனை உறுதிப்படுத்திட வேண்டும். மேலும், சுகாதார தூதுவர்களாக பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசியல் கட்சியினரும், சமூக அமைப்புகளும், தன்னார்வ அமைப்புகளும், 12.09.2021 அன்று நடைபெறவுள்ள சிறப்பு தடுப்பூசி முகாமிற்கு தங்களை சார்ந்த அனைவரையும் அழைத்து வந்து அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

**ஓம்/-ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**நாமக்கல் மாவட்டம்.**